# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 10130/விசாரணை/E/2023**

திரு.செ.மணிகண்டன் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
துறையூர், திருச்சி மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

******

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 23.10.2024 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், துறையூர் வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் 09.12.2024 அன்று நேரில் ஆஜராகி, சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இவ்வாணையம் 11.12.2024 அன்று பிறப்பித்த உத்தரவினையடுத்து, துறையூர் வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் 30.01.2025 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, 28.01.2025 தேதியிட்ட அறிக்கையை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

2. பொதுத் தகவல் அலுவலரின் 28.01.2025 தேதியிட்ட அறிக்கை மற்றும் மேல்முறையீட்டாளர் 03.02.2025 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பிய கடிதத்தின் அடிப்படையிலும், இவ்வாணையம் 25.02.2025 அன்று கீழ்க்கண்ட உத்தரவுகளை பிறப்பித்திருந்தது:-

1. இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளர் தான் **வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்பவர் என்பதற்கான சான்றிதழ் ஆதாரத்தை** முசிறி வருவாய் கோட்ட அலுவலருக்கு அனுப்பி வைத்திட இவ்வாணையம் அவருக்கு உத்தரவிடுகிறது.

2. மேற்குறித்த உத்தரவு 1-ன்படி மேல்முறையீட்டாளரிடமிருந்து அவர் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்பவர் என்பதற்கான சான்றிதழ் ஆதாரத்தை பெறும்பட்சத்தில், **முசிறி வருவாய் கோட்ட அலுவலர், அது குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு, மேல்முறையீட்டாளர் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்பவர் என உறுதி செய்யும்பட்சத்தில்,** மேல்முறையீட்டாளருக்கு அவர் கோரிய முழுமையான ஆவண நகல்களை துறையூர் வட்டாட்சியர் அலுவலக பொதுத்

தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைக்க உத்தரவிட வேண்டும். மேற்படி தகவல்களை மேல்முறையீட்டாளர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலையும் மற்றும் மேல்முறையீட்டாளர் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்பவர்தான் என்பதற்கான ஆதாரத்தையும் இணைத்து அறிக்கையை இவ்வாணையத்தில் **27.03.2025 அன்று துறையூர் வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மூலம் நேரில் சமர்ப்பிக்குமாறு முசிறி வருவாய் கோட்ட அலுவலருக்கு** இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

3. முசிறி வருவாய் கோட்ட அலுவலர், மேல்முறையீட்டாளர் **வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்பவர் அல்ல என்று மேல்முறையீட்டாளர் சமர்ப்பிக்கும் ஆவணங்கள் மற்றும் விசாரணையில் உறுதி செய்யும்பட்சத்தில்,** மேற்படி விபரங்கள் குறித்தும், உரிய கட்டணத் தொகையை செலுத்தி தகவல்களை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்தும், மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் கடிதம் அனுப்பி வைத்து, அதனை மேல்முறையீட்டாளர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலை இணைத்து அறிக்கையை இவ்வாணையத்தில் **27.03.2025 அன்று துறையூர் வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மூலம் நேரில் சமர்ப்பிக்குமாறு முசிறி வருவாய் கோட்ட அலுவலருக்கு** இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

3. மேற்குறித்த இவ்வாணையத்தின் 25.02.2025 தேதியிட்ட உத்தரவின்படி, துறையூர் வட்டாசியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் திரு.R.V.பரசுராமன் 27.03.2025 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, முசிறி வருவாய் கோட்டாட்சியரின் மேலெழுத்து ந.க.எண்.அ1/1228/2025 நாள் 22.03.2025-ன் நகலை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

4. முசிறி வருவாய் கோட்டாட்சியர் 22.03.2025 தேதியிட்டு துறையூர் வட்டாட்சியருக்கு அனுப்பியுள்ள மேலெழுத்தில், கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார் :-

**“மேற்கண்ட பார்வை 3 மற்றும் 4 காணும் கடித அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள ஷாராம்சங்களின் அடிப்படையில், மேல்முறையீட்டாளர் செல்வராஜ் மகன் திரு.மணிகண்டன் என்பவர் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்பவர் என கருத இயலாது என்று முடிவு எட்டப்படுகிறது”**

5. இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேற்குறித்த வருவாய் கோட்டாட்சியரின் மேலெழுத்தின் அடிப்படையில், மேல்முறையீட்டாளருக்கு 24.03.2025 தேதியிட்ட கடிதத்தில் 5025 பக்கங்களுக்கு பக்கத்திற்கு ரூ.2/- வீதம், ரூ.10,000/-ஐ உரிய தலைப்பில் செலுத்தி ஆவண நகல்களை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துள்ளதாக தெரிவித்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

6. மேற்படி அறிக்கைகளின் அடிப்படையில், இவ்வாணையத்தால் கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன :-

1. **மேல்முறையீட்டாளர் 03.02.2025 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பி வைத்து தனக்கு ஆவண நகல்களை சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி வழங்கக் கோரியதன் அடிப்படையிலேயே** இவ்வாணையம் 25.02.2025 தேதியிட்ட ஆணையில்,

- மேல்முறையீட்டாளர் தான் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்பவர் என்பதற்கான சான்றிதழ் ஆதாரத்தை முசிறி வருவாய் கோட்ட அலுவலருக்கு அனுப்பி வைத்திடவும்,

- அவ்வாறு மேல்முறையீட்டாளர் ஆதாரத்தை சமர்ப்பிக்கும்பட்தில், முசிறி வருவாய் கோட்டாட்சியரை அது குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு **மேல்முறையீட்டாளர் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்பவர் என உறுதி செய்யும்பட்சத்தில், மேல்முறையீட்டாளருக்கு அவர் கோரிய ஆவண நகல்களை சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி வழங்கிடவும்,**

- அவ்வாறு **மேல்முறையீட்டாளர் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்பவர் அல்ல என உறுதி செய்யும்பட்சத்தில்**, மேல்முறையீட்டாளருக்கு உரிய கட்டண தொகையை செலுத்தி தகவல்களை பெற்று கொள்ளுமாறு தெரிவிக்கவும் இவ்வாணையம் உத்தரவிட்டிருந்தது.

மேற்படி விபரங்கள் குறித்து உரிய விசாரணை மேற்கொண்ட பின்பாக **முசிறி வருவாய் கோட்டாட்சியர்** தனது 22.03.2025 தேதியிட்டு துறையூர் வட்டாசியருக்கு அனுப்பியுள்ள மேலெழுத்தில், “**மேல்முறையீட்டாளர் செல்வராஜ் மகன் திரு.மணிகண்டன் என்பவர் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்பவர் என கருத இயலாது**” என்று தெரிவித்துள்ளதால், **மேல்முறையீட்டாளர் தனது சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான மனுவில் கோரிய ஆவண நகல்களை தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி வழங்கிட கோரியதை ஏற்க வழிவகை இல்லை** என்று இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

2. இவ்வாணை கிடைக்கப் பெற்ற 7 தினங்களுக்குள் முசிறி வருவாய் கோட்டாட்சியரின் 22.03.2025 தேதியிட்ட மேலெழுத்தின் நகலை மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அதனை மேல்முறையீட்டாளர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலை இணைத்து அறிக்கையை இவ்வாணையத்தில் **09.05.2025-க்குள் இவ்வாணையத்திற்கு பதிவஞ்சலில் அனுப்பி வைக்குமாறு துறையூர் வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு** இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

3. மேல்முறையீட்டாளருக்கு இவ்வழக்கில் அவர் கோரிய ஆவண நகல்கள் தேவைப்படும்பட்சத்தில், அரசு தலைப்பில் உரிய கட்டணத் தொகையை செலுத்தியற்கான ரசீதின் நகலை பொதுத் தகவல் அலுவலரிடம் சமர்ப்பித்து, ஆவண நகல்களை பெற்றுக் கொள்ளுமாறு **மேல்முறையீட்டாளருக்கு** இவ்வாணையம் உத்தரவிடுவதுடன், அவ்வாறு மேல்முறையீட்டாளர் ஆவண நகல்களை பெறுவதற்கான உரிய கட்டணத்தை அரசு தலைப்பில் செலுத்திய ரசீதின் நகலை சமர்ப்பிக்கும்பட்சத்தில், அவர் இவ்வழக்கில் கோரிய ஆவண நகல்களை வழங்கிட **பொதுத் தகவல் அலுவலருக்கு** இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

4. மேற்குறித்த ஆணைகளுடன், இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 04.04.2025**

**ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 10130/விசாரணை/E/2023</u>**

பெறுநர்
வருவாய் கோட்ட அலுவலர்,
வருவாய் கோட்ட அலுவலகம்,
முசிறி, திருச்சி மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
துறையூர், திருச்சி மாவட்டம்.

திரு.செ.மணிகண்டன் த/பெ.திரு.செல்வராஜ்
3/205A கீழத் தெரு, கோட்டப்பாளையம்,
துறையூர் வட்டம்,
திருச்சி மாவட்டம்-621 003.

Copy to: File

RJ/PS 4.4